# ஸ்வரூப வேல் - முருகனின் சகோதரி ஜோதி

**( Swarupa Vel: - Skanda's Sister Jyoti by Dr. Alagappa Alagappan )**

**மூலக் கட்டுரை ஆங்கிலத்தில் : டாக்டர் அளகப்பா அளகப்பன்**

**தமிழ் மொழி பெயர்ப்பு : சாந்திப்பிரியா ( nrj_1945@yahoo.com )**

ஜோதி சிவபெருமானுடைய குடும்பத்தைச் சேர்ந்தவள். சிவபெருமான் - பார்வதி இருவருக்கும் முருகனும், வினாயகரும் எப்படிப் பிறந்தனரோ அப்படித்தான் சிவபெருமான்- பார்வதி உறவினால் வெளிவந்த ஒளியில் பிறந்தவரே ஜோதியும். ஒளியில் ஒரு பக்கத்தில் இருந்து ஆண் பாகமாக வெளி வந்தவர் முருகன், மறு புறத்தில இருந்து பெண்ணாக வெளி வந்தவர் ஜோதி. அதனால்தான் ஜோதியை முருகனின் சகோதரி என்கின்றனர். நிரந்தரமாக அந்த குடும்பத்தில் அவளும் ஒருவளானாள்.

ஒருவரது உடல் கோவிலுக்கு சமமானது. வலது, இடப்புற நாசிகளே சிவபெருமானும் -சக்தி என்கின்ற பார்வதியும் ஆவர். வினாயகப் பெருமான் முதுகுத் தண்டின் அடியில் அமர்ந்து இருக்கின்றார். அங்கிருந்துதான் குண்டலினி சக்தி வெளிப்படுகின்றது. அந்த சக்தி ஐந்து சக்கரங்களையும் -மூலதாரா, மண்பூரகா, ஸ்வாதிஷ்டானா, அனஹதா, விசூதி மற்றும் அஜ்ன சக்ரா - முருகனின் ஆறுபடை வீட்டையும் கடந்து மேலே எழும்பி வந்து நெற்றிப் பொட்டில் உள்ள அஜ்ன சக்கிரத்துடன் கலக்கும் பொழுதுதான் அவளுடைய தாயாரின் சக்தி வெளிப்பட அதை தன் மகனுக்கு கொடுத்து அவனுக்குள் ஊடுறுவி செல்ல வைக்கும் நிலை என்று கருதப் படுகின்றது. முருகனின் அந்த ஆறு சண்டை வீடுகளையும் வெற்றி கொண்டு மேல் எழும்பி ஆறாவது சக்கிரத்தில் அஜ்ன சக்கிரத்தில் உள்ள தன் அன்னையை அடைகின்றாள் ஜோதி.

ஸ்கந்த புராணத்தில் கூறப்பட்டு உள்ளபடி சிவபெருமானின் நெற்றிப் பொட்டில் இருந்து வெளியான ஆறு ஒளிக் கதிர்களில் பிறந்தவரே முருகப் பெருமான். அதனால்தான் முருகனை முக்கியமானக் கடவுள் என்று மட்டும் அல்ல சிவபெருமானின் ஒரு அம்சம் என்றும் கருதுகின்றனர். அது போலவே பார்வதியின் நெற்றிப் பொட்டில் இருந்து வெளியான ஒரு ஒளிக் கதிரில் இருந்து வெளியானவளே. ஜோதி.முருகனுக்கு அரக்கன் சூரபத்மனை அழிக்கும் வேலையை கொடுத்த பொழுது தன் உடலில் இருந்து எடுத்த வேல் ஒன்றை அவருடைய தாயார் தந்து அழிக்க முடியாத ஆயுதம் அது என்றாளாம். அது ஆயுதமல்ல, அதுவும் ஒரு கடவுளே.

சமீப காலம் வரை ஜோதியைப் பற்றிய உண்மையான விவரங்கள் கிடைக்காமல் இருந்தது. ஆனால் 1978 ஆம் ஆண்டில் ஸ்ரீலஸ்ரீ பன்றிமலை ஸ்வாமிகள் தன்னிடம் (டாக்டர் அளகப்பா அளகப்பபனிடம்) முருகன் னையில் உள்ளது வேல் அல்ல, ஆதி பராசக்தி கொடுத்த ஜோதியே என தெரிவித்தாராம். ரூபமற்ற நிலையில் ஜோதியை ஆலயங்களில் வழிபடுகின்றனர், ஆனால் ஜோதியை ரூப வழியிலும் வழி படலாம் என்று தெரிகின்றது.



ஜோதி

ஸ்கந்தனின் இளைய சகோதரியே ஜோதி . சக்தி வேல் என்ற பெயரில் அவளுடைய தாயார் கொருத்தது சக்தியூட்டப் பட்ட ஆயுதம். அந்த வேலுக்கோ பராசக்தியின் அனைத்து ஆற்றல்களும் இருந்தன.அது இரத்தினம் போன்று ஜொலித்ததினால் இரத்தின வேல் என்றும் பெயர் பெற்றது. அது இருளை அகற்றி, அஞ்சாமயை அழித்து ஞானத்தைத் தருவதால் ஞான வேல் என்றும் பெயர் பெற்றது. ஞானம் எப்பொழுதுமே வெற்றி பெறுவதால. ஆதை வெற்றி அல்லது வீர வேல் என்றும் கூறுகின்றனர். ஞானிகள், முனிவர்கள், ரிஷிகள் விட்டுச் சென்ற ஞானத்தின் பின் அவளே நிற்கின்றாள். ஒருவருக்குள் உள்ள அறியாமயை அழித்து, அவர்களுக்குள் நடக்கும் உட் போராட்டங்களை ஒடுக்கி, இறுதியாக கடவுளைக் தேடிச் செல்லும் பக்தி மார்கத்தில் செல்ல அவர்களுக்கு அருள் புரியும் முருகனுக்கு பக்க பலமாய் நிற்கின்றாள். அந்த வேல் உருவம் அற்றது, நெருப்பில இருந்து வெளிப்பட்டதினால் அதற்கு அழிவும் இல்லை, அதை வெற்றி கொள்ளவும் முடியாது.

முருகனிடம் இருந்து பிரிக்க முடியாதவள் ஜோதி. ஜோதியை வேல் உருவில் வழிபடாத ஆலயங்கள் இல்லை. சரவணன் என்ற கந்தனுடன் பிணைந்து இருந்தபடி அவர் சார்பில் துணை புரிவதால் ஜோதியை சரவணபயாயை என்றும் கூறுகின்றனர். உருவம் அற்ற அவள் புத்திசாலித்தனத்தைக் குறிக்கும் வகையிலான ஈட்டி முனையுடன் கூடிய மெல்லிய, நீண்ட வேல் என்ற உருவில் இருக்கின்றாள். அன்பையும் சகோதரத்துவத்தையும் வெளிக் காட்டி தீயவற்றை அழிக்க தன்னுடைய தாயாரிடம் இருந்து பெற்ற சக்தியுடன் துர்கையாக விளங்குகின்றாள். பழமுதிர் சோலையில் உள்ள அஜ்ன சக்கரத்தைக் குறிக்கும் ஆறுபடை வீட்டின் ஒன்றில் அவள் காட்சி தருகின்றாள். அது மதுரையில் உள்ளது. முக்கியமாக பொளர்ணமியில் கிராமங்களில ஜோதியை ராக்காயி என்ற பெயரில், ஒரு தலை மீது கொழுந்து விட்டு எரியும் தீப் பந்து போன்ற உருவில் வணங்கி பூஜிக்கின்றனர். அந்த உருவம் ஜோதியின் அவதாரமான வேலைக் குறிக்கின்றது .

அகஸ்திய முனிவர் இயற்றிய ஷோடஸம் என்ற பக்தி நூல் பார்வதியுடன் வேலுக்கு உள்ள உறவை வெளிக் காட்டும் விதத்தில் எழுதப் பட்டு உள்ளது. வளர் பிறை, தேய்பிறை இரண்டிலும் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் சதாசிவமான சொக்கநாதருடன் உள்ள மனோன்மணி என்ற அன்னை, ஜோதியுடன் நெற்றிப் பொட்டில் உள்ள அஜ்ன சக்கிரத்துடன் ஒன்று சேர இருக்கும் பொழுது தான் அனுபவித்ததையே விளக்கி கூறுகின்றார். நெற்றிப் பொட்டின் நருவில் உள்ள அவள் ஓம் என்ற பிரணவத்தில் இருந்து எப்படி ஜோதி வெளி வந்தாள் என்றும் கூறினார். பொளர்ணமியில் அவள் பூரணப் பொலிவுடன் ஒளி போல ஜொலித்தபடி இருக்கும் எல்லாம் நிறைந்த பரப் பிரும்மம் அவள் என்கின்றார்.

ஒவ்ஒரு வருடமும் தமிழ் மாதமான கார்திகையில் திருவண்ணாமலையில் சிவ பெருமான் தலத்தில் நடக்கும் தீபத் திரு விழாவில் ஜோதியை கடவுளாகவே வழிபடுகின்றனர். அங்கு ஜோதியை அருட்பெரும் ஜோதி என்றே கூறுகின்றனர். நடராஜர் என்கின்ற சிவபெருமான் தன் இடக் கையில் ஜோதி ஒளி போல ஒரு ஜுவாலையை வைத்துக் கொண்டு நடனம் ஆடும் பொன்னம்பலத்தில், தங்க மேடையில் சிவ பெருமானுடன் இருக்கின்றாள ஜோதி . ஜுவாலையில் அல்லது ஜோதியில் இருந்தே அனைத்தும் வெளிவருகின்றன. ஜோதி என்பது ஆலயங்களில் ஏற்றப்படும் விளக்கு. இறை அருள் ஒளியை கொடுப்பது அது. நம் பேச்சைக் கட்டுப்படுத்துபதும் அதுவே. நம் வாழ்வில் ஒளி தருமாறு நாம் வேண்டுகிறோம். ஜோதி ஏழு திரைகளைத் தாண்டி நிற்கிறாள் ( Vibgior ). ஆவை அனைத்தும் மறைந்த பின்னே அவள் தெரிகிறாள். ஜோதி ஒளியை அடயாளம் காட்டி மறைந்த மற்றொருவர் இராமலிங்க அடிகளார்.

தன்னுடைய தாயாருடன் சேர்ந்து கன்யாகுமரியாக இருந்தவாறு சாதுக்கள், சன்யாசிகளுக்கு அறிவு தந்தவள். நூற்றுக் கணக்கான வருடங்களாக அவளை ஜ்வால குமாரி எனறும், வட நாட்டில் ஜ்வால முகி என்றும் வணங்கப்பட்டவள். அறிவைத் தருபவள், குழந்தை தெய்வம எனப்படும் வகையில் அவளை ஞானாம்பா எனவும், பாலாம்பா எனவும் கூறுவது உண்டு. ஜோதி ஒளியைப் புகழ்ந்து போற்றும் சித்தர் பாடல்கள் பல உண்டு. ஷண்முகனின் பெண்பாலே ஜோதி என்ற ஷண்முகி . அவளை கார்த்திகேயி எனவும் குமாரி எனவும் அழைப்பது உண்டு.

## ஜோதி மந்திரங்கள்

1982 ஆம் ஆண்டில் குமாரி ஹில்டா சார்ல்டன் என்பவர் மூலம் நியூயார்க் நகரில் உள்ள பிளஷிங் எனும இடத்தில் இருக்கும் மஹா கணபதி ஆலயத்தில் ஓதப்படும் இந்த மந்திரத்தை நமக்கு அருளினாள். ( Maha Vallabha Ganapati Temple at Flushing, New York )

ஓம் ஜய ஜய மகா வீர பகவான் ஸ்ரீ ஸ்கந்தா நமஹா

ஓம் ஜய ஜய மஹா ஜோதி சக்தி சரவணபயாயை நம நமஹா

ஸ்கந்தன் அவளுக்கு அளித்த உபதேசத்தின்படி பக்தியோடு இதை உச்சரித்தால் நமக்குள் உள்ள சிவ-சக்தி அல்லது யிங்- யாங் சக்தியை உயிரூட்டுமாம். ஸ்கந்தன் கூறினாராம் வேல் என்பது முதுகெலும்பைப்போல, அதன் மேல் உள்ளது தலைப்போல,எழுப்பப்பட்ட குண்டலினி போல அதற்குள் ஜோதி ஒளி உள்ளது. நானே் பலம் மிக்க சக்தியாக இருந்து கொண்டு குண்டலினி சக்தி கீழ் இருந்து முதுகெலும்பின் மேல் பகுதி வரை பாய்ந்து செல்ல வழிகாட்டுகின்றேன் . அப்படி அந்த குண்டலினி சக்தி மேல் எழும்பி வெடிக்கும் பொழுது தெய்வமாக ஜோதி தோன்றுகிறாள்.

ஜோதி ஒளியை, வேல் ஒன்றை பார்ப்பது போல நோக்கியபடி இருக்க, நம் நினைவு தீவிரமடைய அவளை அங்கு காண முடியும். தெய்வீகத்தையும் அதன் கருணையையும் உணரும் வகையிலான நிலைமைக்கு நம்மை அது அழைத்துச் சென்றுவிடுவதையும் பார்க்கலாம். அவை அனைத்தும் நம் உள்ளத்தின் உள்ளே உணரலாம்.

நானே தலைவன், இந்த செயல்களை முதுகெலும்பின் மேல் பகுதி வரை
நடத்திச் செல்லும் தளபதி. எவருக்கு விடுதலை வேண்டுமோ அவர்கள்
என் சொற்படி நடந்தால் வெற்றி நிச்சயம்.

எவர் படைத் தலைவரின் கட்டளைகளை மீறிச் செல்கின்றானோ

அவர்கள் வெற்றி அடைவதில்லை.

யுத்த பூமியில் தளபதியின் கட்டளையை மட்டுமே ஏற்று நடக்க வேண்டும்.

இத்தனை யுகங்களாக செயலற்று இருந்த ஜோதி இனி புத்துயிர் பெற்று புது சக்தி யுகத்தில் கலியுலகில் உள்ள தீமைகளை அழிக்க எழப் போகின்றாள் என்பதை உணர்தும் வகையில் இந்த மந்திரங்கள் அமைந்து உள்ளன.

ஓம் ஷிரிம் ஆதி பிரம்மேஸ்வரியை நமஹா
ஓம் ஷிரிம் ஹிரீம் க்ரீம் க்லீம் ஜ்யாதிஸ்வரியாயை நமஹா

முதல் மந்திரம் அவளை படைப்பவளாகவும், அடுத்ததில் பிரகாசிக்கும ஒளி வெள்ளம் சூழ்ந்த, தெய்வீகமும் செல்வமும் தரும் மஹாலட்சிமிக்கு இணையானவளாகவும், உலகையும், கிரகங்களையும் பிரதிபலிக்கும் புவனேஸ்வரியாக, அழிவில்லா அன்னையான துர்கையாகவும் இருப்பதாகக் கூறுகின்றது. அகஸ்த்தியர் ஜோதியை அற்புதமானவள், ஆனந்தத்தைத் தருபவள், மற்றும் உருவமற்றவள் என்றும் விவரித்து உள்ளார்.

குண்டலினி யோகா மூலம் ஜோதியை ஆராதிக்கலாம். திருமூலர் கூறினார்

வடக்கு, தெற்கு பகுதி மக்கள் அவர் பின் அலைந்து கொண்டு
நிற்கையில் , கிழக்கிலும் மேற்கிலும் அவரைத் தேடி அலைய ,
ஓம் என்ற மூலாதர மந்திரத்தைக் கூறி குண்டலினியைத்
தட்டி மேல் எழுப்ப எழுப்ப, ஒளியைப் போல நீ தோன்றுகிறாய்.

ஜோதியை பௌர்ணமியில் மாலை மற்றும் இரவு வேளைகளில் ஆராதிக்கலாம். ஆவளை சரவணபயாயை அல்லது வேல் உருவில் அவளை அனைத்து தினத்திலும் முருகனுடன் சேர்த்து ஆராதிக்கலாம். கார்த்திகை தினங்கள் விஷேஷமானவை. சூரபத்மனுடன் தன் மகன் போருக்குப் புறப்பட்ட பொழுது பார்வதி தன் நெற்றிப் பொட்டில் இருந்து மே மாதத்தில் வரும் விசாக நட்சத்திரத்தின் அன்று நெருப்பாய் வெளி வந்தவளை வேலாக்கிக் கொடுத்த அந்த நாளில் , அவளை வழிபடுவது மிகவும் நல்லது. கபில முனிவர் தன்னை கேலி செய்த சகாரா மன்னனின் 60,000 மகன்களையும் பொசுக்கி விட , உள்ளூர் மக்கள் நெருப்பிடம் விட்ட வேண்டுகோளை ஏற்று அந்த சாம்பல் கடலில் கரைந்தன.

## ஜோதி இயக்கம்

வட அமெரிக்க நாட்டில் உள்ள மஹா வல்லப கணபத தேவஸ்தானம் இந்து தத்துவத்தை இந்தியாவிற்கு வெளியிலும் பரப்புவதற்கான அவசியத்தினையும், அந்த முயற்சிக்குத் தேவையான தங்கள் கடமையையும் உணர்ந்ததினால், நியூயார்க் நகரில் ரூபமற்று இருந்த ஜோதிக்கு நான்கு சிலைகள் செய்து மற்ற இடங்களில் அவளுக்கு ஆலயம் அமைத்தால் அவர்களுக்கு அதைத் தர தீரமானித்ததின் மூலம் ஜோதி வழிபாட்டின் முதல் இயக்கத்தைத் துவக்கினர்.

1983 ஆம் ஆண்டு ஜூன் இருபத்தி ஏழாம் தேதி அன்று ஹூஸ்டன் நகரில்தான் திரு அனந்தராத சேஷன் என்பவர் தலைமையில் முதல் விக்கிரகம் பிரதிட்சைப் செய்யப் பட்டது.பிலஷிங் நகரில் உள்ள கணேஷர் ஆலயத்தில. ஸ்கந்தனுக்கு பக்கத்து சன்னிதியில் ஜோதிக்கும் சறிய ஆலயம் அமைய அங்கு வந்து நிறைய பக்தர்கள் அதை வழி படுகின்றனர். கலிபோர்னிய நகரில், கலபஸாஸ் என்ற ஊரல் லாஸ் வெர்ஜினிஸ் கன்யான் சாலையில் உள்ள வெங்கடேஷ்வரர் கோவிலில் ஜோதிக்கு தனி சன்னதி உள்ளது. அந்த இடத்தினையே தன்னுடைய இருப்பிடமாக கொண்டு உள்ளாள் ஜோதி. கபில முனிவர் ஜோதியை தன் நெற்றிப் பொட்டில் நிலை வைத்த வண்ணம் தவம் செய்தாராம். .ஜோதியின் மற்றும் ஒரு விக்கிரககத்தை வாஷிங்டனில் உள்ள முருகன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்ய உள்ளனர்.


இந்தியாவில் சென்னையில் பெஸன்ட் நகரில் உள்ள ஆறுபடை வீட்டில ஜோதியின் ஆலயம் எழுப்பப்பட உள்ளது. ஆறுபடை வீடான ஆறு சக்கரங்கள் சூழ்ந்து இருக்கும்படி உள்ளார் மூலாதார கணபதி . ஆறாவது வீட்டில் வேலாக ஜோதி இருப்பாள். வழிபாட்டு முறையினையும் வழி வகுக்கும் இந்த இடத்தில் தியான மண்டபமும் அமைய உள்ளது.

## கட்டுரையின் முடிவுறை

தைத்ரிய உபனிஷத் 2.1 எனற நூலில் எழுதப் பட்டு உள்ளபடி ஆகாயம், நீர், நிலம், நெருப்பு, மற்றும் பூமி அனத்தும் பிரும்மனின் படைப்புக்கள். உலகில் உள்ள அனைத்துப் படைப்புக்களிலும் , எங்கும் நிறைந்துள்ள பிரும்மனுடன் கலந்து இருப்பவை. இந்துப் புராணங்களும் அனைத்துப் படைப்புகளுக்கும் காரணமாக உள்ளது சிவபெருமானின் குடும்பமே என கூறுகின்றன. அந்த குடும்பத்தில் சிவபெருமான், பார்வதி, வினாயகர், முருகன் மற்றும் ஜோதி அடங்குவர். சிவபெருமான் உணர்வுள்ள பிரபஞ்சத்தினையும், பார்வதி அதில் உள்ள சக்தியையும், வினாயகர் நீர் நிலத்தையும்,

நெருப்பை முருகனும், மற்றும் காற்றையும் வெட்டவெளியை ஜோதியும் குறிக்கின்றனர். வெட்டவெளியில் காற்றில் நெருப்பு எரிவதால், வினாயகரை விட ஜோதியை ஸ்கந்தனின் சகோதரியாகவே இந்துப் புராணங்கள் ஏற்கின்றன. எங்கெல்லாம் ஸ்கந்தனின் வழிப்பாட்டுத் தலங்கள் உள்ளனவோ அங்கெல்லாம் ஜோதி உருவமற்ற முறையில் வழி படப்படுகின்றாள். நெற்றிப் பொட்டின் நடுவில் உள்ள அஜ்ன சக்கரத்தில் அமர்ந்து உள்ள குண்டலினி சக்தியை தீவிர தியானத்தின் மூலம் தட்டி எழுப்ப, ஜோதி வெளி வருகிறாள் என்று தந்திர யோக முறைக் கூறுகின்றது. இளமைத் தோற்றம் அளிக்கும் ஜோதி பிரகாசிக்கும் உடைகளை அணிந்து உள்ளாள். அது உள்ளத்தில் உள்ள அஞ்னானத்தைத் அகற்றி ஞானத்தைத் தருகின்றது. விளக்கை ஏற்றினால் ஒளி கிடைப்பது போலவே கடவுள் அருளைக் கொண்டு ஞானம் பெற்று , உயிரினங்கள் மீது அன்பு செலுத்தி ஆன்மீக வாழ்க்கையில் உயர்வு அடையலாம்.





மஹா வல்லப கணபதி தேவஸ்தானம், நியூயார்க்